செய்தி வெளியீடு எண்–673 நாள் 18–8–2008

**கலைஞர் அரசின் மனித நேயம் வளர்க்கும் மகத்தான திட்டமாகிய பள்ளிச் சிறார்கள் இருதய அறுவை சிகிச்சைத் திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்து கொண்ட திண்டுக்கல் மாவட்ட சிறார்கள் 11 பேர் பெற்றோருடன் சென்னை வந்து முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்**

**குணம் அடைந்துள்ள சிறுவர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் வாழ்த்து**

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை நோயாளிகள், உயிர் காக்கும் அறுவை சிகிச்சைகளான இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, இடுப்பு மாற்று அறுவை சிகிச்சை, தண்டுவட அறுவை சிகிச்சை போன்ற அறுவை சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் செய்து கொள்ள தமிழ் நாடு மாநில நோயாளர் சங்க நிதியிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலமாக தலா 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 5 ஆயிரத்து 248 ஏழை நோயாளிகளுக்கு 13 கோடியே 55 இலட்ச ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 2007–ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 அன்று சுதந்திர தின விழா உரையில் ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த சிறார்களை இருதய நோய்களிலிருந்து காத்திட, அவர்கள் தனியார் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்து கொண்டால், மூடிய இருதய அறுவை சிகிச்சைக்கு 10 ஆயிரம் ரூபாயும், சாதாரண திறந்த இருதய அறுவை சிகிச்சைக்கு 30 ஆயிரம் ரூபாயும், கடினமான திறந்த இருதய அறுவை சிகிச்சைக்கு 70 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கி ஏழை எளிய குடும்பங்களைக் காத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது என்ற ஓர் அறிவிப்பினை வெளியிட்டார்கள். அத்திட்டத்தின்படி அரசு மருத்துவமனைகளில்

இருதய அறுவை சிகிச்சைக்குப் பதிவு செய்து கொண்டுள்ள ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்கு, 17 தனியார் மருத்துவமனைகளின் மூலம் இருதய அறுவை சிகிச்சை செய்திடும் **இளம் சிறார்கள் இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை** மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 21.11.2007 அன்று தொடங்கிவைத்தார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக இதுவரை 294 சிறார்களுக்கு தனியார் மருத்துவமனைகளில் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஏறத்தாழ சுமார் 100 குழந்தைகள் அறுவை சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 85–வது பிறந்த நாளான 3.6.2008–ம் நாளன்று, **பள்ளிச் சிறார்கள் இருதய அறுவை சிகிச்சைத் திட்டம்** என்ற **ஒரு சிறப்புத் திட்டம்** தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் ஜூன் மாதம் முடிய சிறப்பு மருத்துவர்கள் அடங்கிய மருத்துவக் குழு பள்ளிகளுக்குச் சென்று சோதனைகள் நடத்தி 9 ஆயிரத்து 986 பள்ளி மாணவர்கள் இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ள விவரம் கண்டறிந்து, அவர்களில் 2 ஆயிரத்து 396 பள்ளி மாணவர்களுக்கு இருதய அறுவை சிகிச்சை தேவை என பரிந்துரை செய்தது. இச்சிறார்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட 17 தனியார் மருத்துவமனைகளில் இருதய அறுவை சிகிச்சை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதுவரை 162 பள்ளிச் சிறார்களுக்கு இருதய அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய பள்ளிச் சிறார்களுக்கும் இருதய அறுவை சிகிச்சை செய்ய தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பள்ளிகளில் பயிலும் ஏழைக் குழந்தைகளின் உயிர்காத்திடும் இந்த மகத்தான திட்டத்தை செயல்படுத்தப்படுவதில் திண்டுக்கல் மாவட்டம் இதுவரை 30 இளம் சிறார்களுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்து முன்னோடியாக விளங்குகிறது. ஏழைச் சிறார்களுக்கான இருதய அறுவை சிகிச்சைத் திட்டம் மற்றும் பள்ளிச் சிறார்களுக்கான இருதய அறுவை சிகிச்சைத் திட்டம் ஆகிய இரண்டு

திட்டங்களின் மூலமாக இதுவரை 456 இளம் சிறார்களுக்கு இருதய அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் முன்னோடியாக விளங்கும் திண்டுக்கல் மாவட்டத்தில் இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட பள்ளிச் சிறார்களில் 11 பேர் தங்கள் பெற்றோருடன், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை தலைமைச் செயலகத்தில் இன்று (18.08.2008) சந்தித்து மகிழ்ச்சியுடன் தங்களது நன்றியைத் தெரிவித்தனர். அப்பொழுது இருதய மருத்துவ சிகிச்சை செய்துகொண்டு குணம் அடைந்துள்ள சிறார்களுக்கு முதலமைச்சர் கலைஞர் வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மின்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா. வீராசாமி, வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஐ. பெரியசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., சிறப்பு தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆர். வாசுகி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் திரு வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் இளங்கோவன் ஆகியோர் உடன் இருந்தனர்.

***

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.